[2002 ஏப்ரல் 1

(ஆ) சூளைமேடு பகுதி பாரதிய ஜனதா கட்சி அலுவலகம் தாக்கப்பட்டது குறித்த மாண்புமிகு முதலமைச்சர் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 110-ன்கீழ் மற்றோர் அறிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், (குறுக்கீடுகள்) இதிலே விவாதத்திற்கு இடம் இல்லை.

திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, bail, No Objection......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 110-ன்கீழ் மற்றோர் அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுக்க உள்ளார்கள். பிறகு பேசுங்கள்.

*** மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, சூளைமேடு பகுதியிலுள்ள பாரதிய ஜனதா கட்சி அலுவலகம் ஒன்றில், கடந்த 30-3-2002 சனிக்கிழமை இரவு, அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. சுந்தரம் என்பவர் சிலருடன் கூட்டமாகச் சென்று, அந்தக் கட்சியின் அலுவலகத்தில் வைத்திருந்த தொலைக்காட்சிப் பெட்டி, மேஜை, நாற்காலி, மின் விசிறி மற்றும் இதரப் பொருட்களைப் பலவந்தமாக எடுத்துக்கொண்டு திரும்பியுள்ளார் என்ற செய்தியைக் கேட்டு, நான் மிக்க அதிர்ச்சியுற்றேன். சட்டத்திற்குப் புறம்பான இத்தகைய செயலைச் செய்துள்ள திரு. சுந்தரம் என்பவர், முன்பு பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்தவராக இருந்திருக்கிறார். பின்னர், அவர் அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில், தன்னை இணைத்துக்கொண்டுள்ளார்.

சூளைமேடு பகுதி, பாரதிய ஜனதா கட்சி அலுவலக நிர்வாகிகள் தடுத்தும், அதை அவர் பொருட்படுத்தாமல் தக்க அனுமதியின்றி, அந்தக் கட்சி அலுவலகத்திற்குள் நுழைந்து, அங்குள்ள பொருட்களைச் சூறையாடி, சிலவற்றை எடுத்துக்கொண்ட அவரது செய்கை, சட்டவிரோதமான செயலாகும். இத்தகைய விரும்பத்தகாத செயலைப் புரிந்தவர் அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், நான் அந்தச் சட்டத்திற்குப் புறம்பான செயலை வன்மையாகக் கண்டிக்கிறேன். இதுபோன்ற அடாத செயல்களில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எவர் ஈடுபட்டாலும், அதை நான் ஒருபோதும் பொறுத்துக்கொள்ள

மாட்டேன் என்றும், இத்தகைய சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எவரும் அறவே ஈடுபடக்கூடாது என்பதையும் நான் இங்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன். மற்றொரு கட்சி அலுவலகத்திற்குள் நுழைந்து அங்குள்ள சொத்துகளுக்குச் சேதம் விளைவித்து, அங்குள்ள பொருட்களை முறைகேடாக எடுத்து வந்துள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. சுந்தரம் என்பவர் மீது உடனடியாகச் சட்டப்படி தக்க நடவடிக்கை காவல் துறை எடுக்க வேண்டுமென்று, சென்னை மாநகரக் காவல் துறை ஆணையருக்கு உத்தரவிட்டுள்ளேன். மேலும், தனது மோசமான செய்கையினால், கட்சிக்கும், கட்சித் தலைமைக்கும் அவப்பெயர் விளைவித்துள்ள திரு. சுந்தரம் என்பவரை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்து நீக்கி உத்தரவிட்டுள்ளேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மேலும், திரு. சுந்தரத்துடன் இந்தச் சட்டவிரோதமான செயலில் ஈடுபட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மகிழன்பன், உதயகுமார், மாரிமுத்து, ராஜாபாதர், குபேரன் ஆகிய 5 பேரையும், கழகத்திலிருந்து நீக்கி வைத்துள்ளேன் என்பதையும் அவர்கள்மீதும் காவல் துறை தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளேன் என்பதையும் தெரிவித்துகொண்டு அமைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

4. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். *(குறுக்கீடுகள்)* என்ன சொல்லுங்கள்.

திரு. மு.பெ. சாமிநாதன்: நான் *6, 7* அறிவிப்புகள் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய அறைக்கு வாருங்கள் பேசி அதை முடிவு செய்வோம். *(குறுக்கீடுகள்)* நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம். திரு. புகழேந்தி.

முற்பகல் 11-20

திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை நடைபெற்றபோதே கவன ஈர்ப்பு கொடுத்து இருக்கிறேன்... *(குறுக்கீடுகள்)*